TAMIL

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் தர உறுதிப்பாடு

**Family Day Care Quality Assurance**

# Handbook

## கையேடு



Second Edition 2004

National Childcare Accreditation Council

© அவுஸ்திரேலிய அரசாங்கம் 2004

ISBN 0-9750664-4-7

இந்த வேலை பதிப்புரிமையுடையது. 1968 ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதாவது பயன்பாட்டை, அத்துடன்/அல்லது வெளியீட்டாளரால் கருதப்பட்டுள்ள நோக்கங்களைத் தவிர்த்து, National Childcare Accreditation Council இடமிருந்து எழுத்துமூலமான முன் அனுமதி இல்லாமல் இதன் எந்தப் பகுதியும் எந்தவிதமான முறையினாலும் பிரதி எடுக்கப்படலாகாது.

National Childcare Accreditation Council Inc., இனால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

National Childcare Accreditation Council Inc., இனால் வெளியிடப்பட்டுள்ளது
Level 3, 418a Elizabeth Street, Surry Hills NSW 2010, Australia (www.ncac.gov.au).

# முன்னுரை

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் தர உறுதிப்பாடானது (Family Day Care Quality Assurance - FDCQA) அவுஸ்திரேலியா முழுவதும் உள்ள, குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளுக்கு அவர்களது இன்றியமையாத ஆரம்ப வயதில் அவர்களின் கற்றலையும் அபிவிருத்தியையும் மிகச் சிறந்த முறையில் மேம்படச்செய்வதற்கான உயர் தர (high quality) பராமரிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பிலுள்ள பிள்ளைகள் அவர்களது அபிவிருத்திக்கான எல்லாத் துறைகளையும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் ஊக்கமளிக்கும், உறுதியான அனுபவங்களையும் பரிமாற்றச் செயற்பாடுகளையும் கொண்டிருப்பதை உறுதி செய்வது FDCQA இன் பரந்த நோக்கமாகும். குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பில் தரத்தை வரையறை செய்வதன் மூலமும் இந்தத் திட்டத்தினால் (scheme) வழங்கப்படும் பராமரிப்பின் தரத்தை அளவீடு செய்வதற்கும் தொடர்ந்து செல்லும் தர மேம்பாட்டுக்கான விடயங்களை அடையாளம் காண்பதற்குமான வழிமுறையை ஏற்பாடு செய்து கொடுப்பதன் மூலமும் இதனை இது செய்கின்றது.

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களுக்கான[1] பிள்ளைப் பராமரிப்பு உபகாரம் (Child Care Benefit) அத்துடன் செயற்பாட்டு உதவி (Operational Assistance) அங்கீகாரத்துடன் தொடர்புடைய, அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட ஒரு முயற்சியே FDCQA ஆகும். 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து FDCQA National Childcare Accreditation Council Inc (NCAC) இனால் நிருவகிக்கப்படுகின்றது.

மற்றைய நாடுகளில் பிள்ளைகளின் சேவைகளுக்காக தன்விருப்பார்ந்த அங்கீகார முறைமைகள் இருக்கின்றபோதும் அவுஸ்திரேலிய FDCQA சர்வதேச அளவில் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில், இது உலகிலேயே முதன் முதல் சட்டவாக்கம் மூலம் பிள்ளைப் பராமரிப்பு நிதியுதவியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதும் மத்திய அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டு ஆதரவளிக்கப்படுகின்றதுமான குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சேவைகளுக்குரிய தர உறுதிப்பாட்டுத் திட்டமாகும். அவுஸ்திரேலிய நீண்ட பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களிலும் பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்திலான பராமரிப்புச் சேவைகளிலும்[2] வெற்றிகரமான தர உறுதிப்பாட்டு முறைமைகள் செயற்படுகின்றன. குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பு தொடர்புடைய FDCQA க்கான திருத்தம் தமது பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான தேர்வுகளைச் செய்யும்போது குடும்பங்களுக்கு மேலும் கூடிய தகவல்களைக் கிடைக்கச் செய்யும்.

ஆராய்ச்சி, அனுபவம் அத்துடன் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பு மற்றும் பிற ஆரம்ப பிள்ளைப் பருவத் துறைகளில் செய்யப்பட்ட விரிவான கலந்தாராய்வுகள் ஆகியவற்றின் விளைவாகத் தோன்றிய தற்போது அறியப்படுகின்ற தரமான பிள்ளைப் பராமரிப்புச் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு FDCQA அமைந்தது. *FDCQA தரச் செயற்பாட்டு வழிகாட்டி (FDCQA Quality Practices Guide)* 6 தர விடயங்களையும் 30 தரப் பராமரிப்புக் கோட்பாடுகளையும் விளக்குகின்றது. இது குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களுக்கான செயற்பாடுகளை வழிகாட்டுவதற்கென அமைக்கப்பட்டுள்ள தரச் சுட்டிகளையும் உள்ளடக்குகின்றது.

---

1 FDCQA இன் நோக்கங்களுக்காக “திட்டம்” ("Scheme") என்ற சொல் பராமரிப்பாளர்கள், ஒருங்கிணைப்புப் பிரிவுப் பணியாளர்கள், முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

2 பாடசாலை நேரத்துக்கு வெளியே உள்ள பராமரிப்புச் சேவைகளுக்கான பாடசாலை நேரத்துக்கு வெளியே உள்ள பராமரிப்புத் தர உறுதிப்பாடும் (Outside School Hours Care Quality Assurance) (OSHCQA) நீண்ட பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கான தர மேம்பாட்டு அங்கீகார முறைமையும் (Quality Improvement and Accreditation System) (QIAS)

## தரமான பிள்ளைப் பராமரிப்பு என்பது யாது?

தரமான பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் பிள்ளைப் *பராமரிப்பிலும்* பார்க்கக் கூடுதலான சேவையைச் செய்கின்றது- தரமான குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பு பராமரிப்பாளர்கள், பிள்ளைகள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியவர்களுக்கிடையில் உறுதியான தொடர்பை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கின்றது. பிள்ளைகள் கற்று தமது அறிவை விருத்தி செய்வதற்கு உதவுமுகமாக அவர்களது ஆராயும் சக்தியையும் மொழித் திறனையும் விரிவாக்குவதற்கான அனுபவங்களை அவர்களுக்கு இது ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

### நல்ல தரமான (good quality) குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டம் (scheme):

- பராமரிப்பாளர்கள், பணியாளர்கள், முகாமைத்துவம், குடும்பங்கள் ஆகியோர்களுக்கிடையில், இந்தத் திட்டத்தின் (scheme) எல்லாத் தொழிற்பாடுகளுக்கும் வழிகாட்டியாகவுள்ள தெளிவான தத்துவமும் இலக்குகளும் பற்றி இணக்கம் காணப்பட்டுள்ளதா,
- பல்வேறுபட்ட பின்னணியிலிருந்து வந்த பிள்ளைகளும் மேலதிக தேவைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளும் உட்பட எல்லாப் பிள்ளைகளினதும் தனித்தன்மையையும் ஒருவருக்கொருவர் சார்பான தன்மையையும் பாராட்டுகின்றது, மதிக்கின்றது, வளர்ச்சியடையச் செய்கின்றது,
- பிள்ளைகளின் அபிவிருத்தி தொடர்பில் அவர்களைப் பாதிக்கும் எல்லா அனுபவங்களினதும் தொழிற்பாடுகளினதும் பொருத்தமான தன்மையை ஆராய்கின்றது, அத்துடன்
- இந்தத் திட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதற்கு குடும்பங்களை உற்சாகப்படுத்துகின்றது. அத்துடன், பராமரிப்பாளர்கள், பணியாளர்கள், குடும்பங்கள் ஆகியோர் தமது நிறைவுப் பங்காக ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதற்காக அவர்களுக்கிடையிலான தொடர்பை வளர்ச்சியடையச் செய்கின்றது.

பிள்ளைகள் எவ்விதம் கற்று தமது அறிவை விருத்தி செய்கின்றார்கள் என்பது உட்பட ஆரம்பப் பிள்ளைப் பருவம் பற்றிய முழுமையான அறிவை அடிப்படையாகக் கொண்டு தரமான பராமரிப்பு செயற்படுத்தப்படுகின்றது. சிறந்த பராமரிப்பை வழங்கும் பராமரிப்பாளர்கள் வெவ்வேறுபட்ட வயதையுடைய பிள்ளைகளுக்கான பொருத்தமான அனுபவங்கள் பற்றியும் அப் பிள்ளைகளின் பொருத்தமான எதிர்பார்ப்புக்களையும் அறிந்திருப்பார்கள், அத்துடன் அவர்களது தனிப்பட்ட அபிவிருத்தி பற்றியும் கலாசார பரிமாணங்களின் அபிவிருத்தி பற்றியும் கூருணர்ச்சி உடையவர்களாக இருப்பார்கள். அத்தகைய பராமரிப்பாளர்கள் எவ்விதம் தொடர்பு கொள்வது என்பது பற்றியும் பிள்ளைகளுடன் எவ்விதம் விசேடமான பிணைக்கும் தொடர்புகளை ஏற்படுத்துவது என்பது பற்றியும் அறிந்திருப்பார்கள். ஒவ்வொரு பிள்ளையினதும் தனிப்பட்ட அக்கறையுள்ள விடயங்களுக்கும் தேவைகளுக்கும் பொருத்தமான ஊக்கமளிக்கும் திட்டமிடப்பட்டதும் தன்னியல்பானதுமான அனுபவச் சமநிலையையும் சுறுசுறுப்பானதும் அமைதியானதுமான காலச் சமநிலையையும் கொண்ட ஒரு சூழலை அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள்.

தர மேம்பாடானது இந்தத் திட்டத்தின் (scheme) எல்லா உறுப்பினர்களையும் ஈடுபடுத்தும் ஒரு கூட்டு வேலைச் செய்முறையாகும். பிள்ளைகளுக்கான பொருத்தமான அனுபவங்களையும் பரிமாற்றச் செயற்பாட்டுப் பாணியையும் இந்தத் திட்டத்தின் மற்றும் பிற எல்லாத் தொழிற்பாடுகளையும் வழிநடத்துவதற்கான தத்துவத்தையும் இலக்குகளையும் வரையறுப்பதற்கு ஒவ்வொரு திட்டத்தையும் (scheme) அதிலுள்ள குடும்பங்களையும் தமது நிறைவுப் பங்காக ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு FDCQA உற்சாகப்படுத்துகின்றது.

FDCQA இல் பங்குபற்றுவதற்கு NCAC இல் பதிவு செய்துகொண்ட குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்கள் (schemes) யாவும் தொடர்ச்சியான தர மேம்பாட்டுக்கான ஒழுங்குமுறையான செய்முறைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றன. இது எவ்விதம் சிறந்தமுறையில் நிறைவேற்றப்படலாம் என ஒவ்வொரு திட்டமும் (scheme) தீர்மானிக்கும் (determine) அதே சமயத்தில் இந்தத் திட்டங்கள் (schemes) பின்வருவனவற்றைச் செய்து காட்டவேண்டும் என்று NCAC தேவைப்படுத்தும்:

(அ) அவை தொடர்ந்து செல்லும் தர மேம்பாட்டுச் செய்முறைகளைக் கொண்டுள்ளன, அத்துடன்

(ஆ) *FDCQA Quality Practices Guide* (2004) இல் விவரிக்கப்பட்டுள்ள திட்ட அளவுகளுக்கு ஏற்ப ஒழுங்கான சுய மதிப்பீடு மூலம் இச் செய்முறைகள் அறிவிக்கப்படுகின்றன.

## பிள்ளைப் பராமரிப்பில் தரம் ஏன் முக்கியமானது

இரண்டு பெற்றோர்களும் வேலை செய்கின்ற அல்லது தனியான பெற்றோரைப் பொறுத்தவரையில் அவ்வொரு பெற்றோர் வேலை செய்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை கூடுதலாக வரவும் அண்மைய ஆண்டுகளில் தமது வீடுகளுக்கு வெளியே பராமரிக்கப்படும், பிறந்த நாளிலிருந்து ஆரம்ப பாடசாலைக் கால வயது வரையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. அவுஸ்திரேலியாவில், வேலை சார்ந்த அத்துடன் வேலை சாராத பராமரிப்பு உட்படவுள்ள குடும்பங்களின் மாற்றமடையும், வித்தியாசமான தேவைகள் பிள்ளைப் பராமரிப்புச் சேவைகளுக்கான அதிகரித்த தேவையில் பிரதிபலிக்கின்றன. தனிப்பட்ட ஒரு பிள்ளை பராமரிப்பில் செலவிடும் சராசரியான நேரம் மிக அதிகமாக அதிகரித்துள்ளது. மிகவும் வயது குறைந்த பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னர் பிள்ளைப் பராமரிப்பில் 12500 மணித்தியாலங்கள் வரை செலவிடமுடியும். இது ஒரு பிள்ளை தனது முழு 13 ஆண்டு கால பாடசாலை கால நேரத்தின்போது பாடங்களில் செலவிடும் நேரத்திலும் பார்க்க 500 மணித்தியாலங்கள் மாத்திரமே குறைவாகும்[3].

குறிப்பாக பிள்ளைகளின் வாழ்க்கையின் முதல் ஆரம்ப ஆண்டுகளில் இள வயதுப் பிள்ளைகள் பெறும் பராமரிப்பின் தரம், அவர்களது கற்றல் அனுபவங்களும் தொடர்புகளும் அவர்களது எதிர்காலத்தை உருவாக்கும் முக்கியமான காரணிகளாக அமைகின்றன. நாங்கள் வேறு ஏதாவது ஐந்து ஆண்டு காலத்தில் கற்பதிலும் பார்க்க எமது வாழ்க்கையின் முதல் ஐந்து ஆண்டுகளிலேயே கூடுதலாகக் கற்கின்றோம் என்பது இப்போது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வாழ்க்கையின் ஆரம்ப காலப் பகுதியில் உயர் தர (high quality) பிள்ளைப் பராமரிப்பில் கொடுக்கப்படும் தெளிவான அனுபவங்கள் பிள்ளையின் அபிவிருத்தியை மேம்படுத்துகின்றது என்பதை மூளை அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சி காட்டுகின்றது. பிள்ளைகளின் வாழ்க்கை முழுவதும் கற்றலையும் சாதனையையும் உயர்த்துவதிலும், கூடுதலான உறுதியான, வாழ்க்கையில் நீண்டகாலம் நீடிக்கக்கூடிய சந்தர்ப்பங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதிலும், வாழ்க்கையின் பிற்பகுதியில் ஏற்படும் உடல்நலக் குறைவைக் குறைப்பதிலும் தரமான பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன.

---

[3] பிள்ளைப் பராமரிப்பு: 50 (வாரங்கள்) x 50 (மணித்தியாலங்கள்) x 5 (ஆண்டுகள்) = 12500 மணித்தியாலங்கள்.
பாடசாலையில் கற்பது: 40 (வாரங்கள்) x 25 (மணித்தியாலங்கள்) x 13 (ஆண்டுகள்) = 13000 மணித்தியாலங்கள்

இளம் பிள்ளைகள் பற்றிய எமது அறிவு வளர்ச்சி, குடும்பங்களின் மாற்றமடையும் வித்தியாசமான தேவைகள், பராமரிப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்கள் பராமரிப்பில் செலவிடும் நேரம் ஆகியவை அவுஸ்திரேலியா முழுவதும் உள்ள குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களில் பிள்ளைகளுக்கான உயர் தரப் (high quality) பராமரிப்பை ஏற்படுத்திக் கொடுப்பதில் FDCQA க்கு உள்ள முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பு தரமான பராமரிப்பைப் பிள்ளைகளுக்கு வழங்குகின்றது என ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும் ஓர் அங்கீகாரச் செய்முறை மூலம் இந்தப் பராமரிப்பை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்படச் செய்வதற்கு FDCQA முறை நோக்கமாகக் கொண்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் உள்ள குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பிலுள்ள 93450 பிள்ளைகளுக்கான தர விளைவுகளை மேம்படுத்தி உறுதி செய்வது FDCQA இன் முடிவான நோக்கமாகும்.[4]

## குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் தர உறுதிப்பாடின் (Family Day Care Quality Assurance) அபிவிருத்தி

2001 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் தர உறுதிப்பாடின் (Family Day Care Quality Assurance) நிருவாகத்துக்கு NCAC பொறுப்பேற்றது. எவ்வாறாயினும் 1990 ஆண்டுகளின் மத்திய பகுதியிலிருந்து அவுஸ்திரேலிய குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் FDCQA இன் அபிவிருத்தி உயர் கவனத்தில் இருந்து வந்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் அதன் தேர்தலுக்கு முந்திய 1996 ஆம் ஆண்டு பெப்ருவரி மாத *குடும்பங்களுக்கான உத்தரவாதக் (Certainty for Families)* கொள்கையில் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பில் தர உறுதிப்பாட்டுக்குரிய தனது பொறுப்பை அறிவித்தது. இந்தப் பொறுப்பு அறிவிப்பின் பின்னர் குறிப்பிடத்தக்க அளவான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் காலத்தின்போது, மாநில, ஆள்புல அரசாங்கங்களினால் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக்கு உரிமம் வழங்குவதற்கான வேலையும் மேற்கொள்ளப்பட்டது. 1997 ஆம் ஆண்டில் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தேசிய திட்ட அளவுகளின் உருவாக்கமும் குடும்பத்துக்கான பகல் நேரப் பராமரிப்புக்கான தர உறுதிப்பாட்டு மாதிரியை உருவாக்குவதற்குப் பொறுப்பாக இருந்த 1998 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட தர உறுதிப்பாடு சம்பந்தமான குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புப் பணிப் பிரிவும் FDCQA இன் உருவாக்கத்தில் உள்ளடங்கும் முக்கிய சம்பவங்களாகும்.

2000 ஆம் 2001 ஆம் ஆண்டுகளின் போது தர உறுதிப்பாட்டு முறைமையை ஆதரித்து வலிமைப்படுத்துவதற்கு ஒரு மாதிரியும் சுய மதிப்பீடுமான ஆதாரப் பகுதி உருவாக்கப்பட்டது. முன்வைக்கப்பட்ட தர உறுதிப்பாட்டு மாதிரியும் ஆதாரப் பகுதியுமான முறைமைக்கான ஓர் ஆறு மாதகாலப் பகுதிக்குரிய முதற்படித் திட்டத்தின் ஒரு பகுதியாக, அவுஸ்திரேலியா முழுவதிலுமுள்ள பதினொரு குடும்பங்களுக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்கள் இருந்தன. குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பின் தனித்தன்மையும் வித்தியாசமான தன்மையும் காட்டப்படுவதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு மாநிலத்தினாலும் ஆள்புலத்தினாலும் முதற்படித் திட்டம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் துறைக்கு, முன்வைக்கப்பட்ட தர உறுதிப்பாட்டு முறைமை பற்றி அறிவிக்கவும் பின் அந்த முறைமை பற்றிய பிரதிபலிப்பைப் பெறவும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் குடும்ப, சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு தொடர்ச்சியான கலந்தாராய்வுக் கூட்டங்கள் 2001 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றன.

FDCQA செயற்படுத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம், இந்த முறைமையின் எல்லாத் துறைகள் பற்றியும் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சமூகத்தின் கருத்துக்களை NCAC தீவிரமாகப் பெற்றுக்கொள்கின்றது.

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சமூகத்தினால் கொடுக்கப்பட்டுள்ள பிரதிபலிப்பு விவரங்கள் FDCQA *Quality Practices Guide* (முதலாம் பதிப்பு, 2001) என்ற வழிகாட்டியை மீளாய்வு செய்வதற்குப் பெரிதும் உதவின.

முதலாவது பதிப்பினை மீளாய்வு செய்வதற்காக NCAC பணியாளர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சேவை வழங்குநர்களைக் கொண்ட ஒரு தொடர்புக் குழுவை அவுஸ்திரேலிய தேசிய குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக் கழகத்தின் (National Family Day Care Council of Australia - NFDCCA) ஆலோசனையுடன் NCAC அமைத்துள்ளது.

FDCQA *Quality Practices Guide* (2 ஆம் பதிப்பு, 2004) என்ற வழிகாட்டியை உருவாக்குவதை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவி செய்வதில் அவர்கள் செய்த பணிக்காக NFDCCA க்கும் தொடர்புக் குழுவுக்கும் NCAC நன்றி கூற விரும்புகின்றது. முன்பு இருந்த பதிப்பிலும் பார்க்க இரண்டாவது பதிப்பு மேம்பாடுடையது என்பதையும் குறைந்த குறுகிய ஆண்டுகளில் இந்தத் துறை எய்திய முன்னேற்றத்தை அது தெளிவாகக் குறிக்கின்றது என்பதையும் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்கள் அறியமுடியும் என NCAC நம்புகின்றது.

FDCQA இன் அபிவிருத்தி பற்றிய மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து FDCQA *Quality Practices Guide* (2004) என்ற வழிகாட்டியின் பிற்சேர்க்கையைப் பார்க்க

## FDCQA வெளியீடுகள்

*FDCQA Handbook* (2004) FDCQA இன் நோக்கைக் கொடுப்பதுடன் FDCQA *Quality Practices Guide* (2004) என்ற வழிகாட்டிக்கானதும் FDCQA சுய ஆய்வு *அறிக்கைக்கானதுமான* FDCQA *(Self-study Report)* (2004) ஒரு கூட்டு வெளியீடாகும். இந்த வெளியீடுகள் பராமரிப்புச் செயற்பாடுகளில் தர மேம்பாடுகளைத் திட்டமிடுதலிலும் FDCQA இன் அறிக்கையிடும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதிலும் திட்டங்களுக்கு வழிகாட்டி உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. FDCQA இல் பங்குபற்றுவதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களுக்கு இந்த வெளியீடுகள் முதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த வெளியீடுகளின் மேலதிகப் பிரதிகளை NCAC இடமிருந்து நேரடியாகவும் கொள்வனவு செய்யலாம். அத்துடன் NCAC இணையத் தளத்திலிருந்து (www.ncac.gov.au) இலவசத் தரவு மாற்றல் மூலம் கிடைக்கும்.

---

[4] பிள்ளைப் பராமரிப்புச் சேவைகளுக்கான தொகைமதிப்பு 2002, குடும்ப, சமூக சேவைகள் திணைக்களம்

# 6 தர விடயங்களும் 30 கோட்பாடுகளும்

## தர விடயம் 1 - பரிமாற்றச் செயற்பாடுகள்

**கோட்பாடு 1.1:** பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் பிள்ளைகளுடன் அன்புடனும் நட்புடனும் நன்மதிப்புடனும் பரிமாற்றச் செயற்பாடுகளைச் செய்கின்றனர்

**கோட்பாடு 1.2:** கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடையிலான தொடர்பு பயனுறுதியுடையதாக உள்ளது, அத்துடன் பராமரிப்பில் பிள்ளைக்கான இடம் கிடைப்பதை ஆதரிக்கின்றது

**கோட்பாடு 1.3:** பராமரிப்பாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடையிலான தொடர்பு பயனுறுதியுடையது, அத்துடன் பராமரிப்பில் குடும்பமும் பிள்ளையும் நிலைகொள்வதை ஆதரிக்கின்றது

**கோட்பாடு 1.4:** பராமரிப்பாளரின் தனிப்பட்ட, குடும்ப ஒழுங்குகள் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பை ஏற்படுத்திக் கொடுப்பதை ஆதரிக்கின்ற உறுதியான குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

**கோட்பாடு 1.5:** திட்டத்தினுள் உள்ள ஒருவருக்கொருவர் இடையிலான தொடர்புகள் வேறுபாடு, குழு வேலை, ஒருவருக்கொருவர் இடையிலான நன்மதிப்பு, புரிந்துணர்வு, சிறப்புத் திறமை ஆகியவற்றை உயர்வாகக் கருதுகின்றன

## தர விடயம் 2 - இயற்கைச் சூழல்

**கோட்பாடு 2.1:** பராமரிப்பாளர்களினது வீடுகளின் உட்புற, வெளிப்புற இடங்களும் விளையாட்டு இடைக்கால* இடங்களும் மகிழ்ச்சி தருகின்றவையாகவும் ஆறுதல் அளிக்கின்றவையாகவும் பிள்ளைக்கு ஏற்றதானவையாகவும் இருக்கின்றன.

**கோட்பாடு 2.2:** எல்லாப் பிள்ளைகளும் பல்வேறுபட்ட கவர்ச்சியாற்றலுள்ள பொருட்களையும் சாதனங்களையும் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றார்கள்

**கோட்பாடு 2.3:** கூட்டிணைப்புப் பிரிவினால் பயன்படுத்தப்படும் வாய்ப்புக்கள் மகிழ்ச்சி தருகின்றவையும் பெறக்கூடியவையுமானதாக உள்ளன

## தர விடயம் 3 - பிள்ளைகளின் அனுபவங்களும், கற்றலும், அபிவிருத்தியும்

**கோட்பாடு 3.1:** வீட்டுச் சூழலில் கற்றலை ஆதரிக்கும் வகையில் எல்லாப் பிள்ளைகளினதும் அக்கறையுள்ள விடயங்களுக்கும் திறமைகளுக்கும் பராமரிப்பாளர்கள் தக்கவாறு இயங்குகின்றார்கள்

**கோட்பாடு 3.2:** வீடுகளுக்குச் செல்வதன் மூலமும் அத்துடன்/அல்லது விளையாட்டு இடைக்காலங்கள் மூலமும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்கள் பிள்ளைகளின் கற்றலை ஆதரிக்கின்றனர்

**கோட்பாடு 3.3:** பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் பிள்ளைகளின் நடத்தையை உறுதியான வழிகளில் வழிநடத்துகின்றனர்

**கோட்பாடு 3.4:** பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் எல்லாப் பிள்ளைகளிலும் உற்சாக மனப்பான்மையையும் சமூகத்தில் வாழ்வதற்கான தகுதி நிலையையும் மேம்படச் செய்கின்றார்கள்

**கோட்பாடு 3.5:** பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் எல்லாப் பிள்ளைகளிலும் உடல்ரீதியான தகுதி நிலையை மேம்படச் செய்கின்றார்கள்

**கோட்பாடு 3.6:** பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் எல்லாப் பிள்ளைகளிலும் மொழி, எழுத வாசிக்கும் திறமை, அறிவார்வம், கணிதரீதியாக ஆலோசிக்கும் தன்மை, விஞ்ஞானரீதியாக ஆராய்தல் ஆகியவற்றை வளர்ச்சியடையச் செய்கின்றார்கள்

**கோட்பாடு 3.7:** பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் எல்லாப் பிள்ளைகளினதும் புதிய கருத்தைத் தெரிவிக்கும் திறமையை ஆதரிக்கின்றார்கள்

---

* FDCQA இன் நோக்கங்களுக்காக , “விளையாட்டு இடைக்காலம்” என்ற சொற்பிரயோகம் பிள்ளையை மையமாகக் கொண்டுள்ள விளையாட்டு அனுபவங்களுக்காக இரண்டு (அல்லது அதிகமான) பராமரிப்பாளர்கள் பிள்ளைகளுடன் ஒன்றாகச் சேர்ந்துகொள்ளல் என்பதை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. விளையாட்டு இடைக்காலத்தை பராமரிப்பாளர்கள் தங்களாலேயே அல்லது கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களினால் ஒழுங்கு செய்யப்படலாம்

## தர விடயம் 4 - உடல் நலம், சுகாதாரம், ஊட்டச் சத்து, பாதுகாப்பு, நல்வாழ்வு

கோட்பாடு 4.1: பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள சூழல் பாதுகாப்பானது

கோட்பாடு 4.2: உணவும் குடிபானமும் ஊட்டச் சத்து நிறைந்ததும் கலாசாரரீதியில் பொருத்தமானதும் ஆகும்

கோட்பாடு 4.3: எல்லாப் பிள்ளைகளினதும் உடல்நலமும் பாதுகாப்பும் பாதுகாக்கப்படுகின்றன

கோட்பாடு 4.4: உள் ஆடைத் துணியை மாற்றுதல், துப்புரவு செய்தலும் அலங்காரமும், குளித்தல் ஆகியவை பிள்ளைகளுக்கான உறுதியான அனுபவங்கள்

கோட்பாடு 4.5: ஓய்வு, நித்திரை, ஆறுதல் ஆகிய பிள்ளைகளின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன

கோட்பாடு 4.6: பிள்ளைகளின் பாதுகாப்பு, வாழ்க்கை நலம் ஆகியவை சம்பந்தமான தற்போது உள்ளதான மாநில அல்லது ஆள்புல சட்டவாக்கம் ஒழுங்காகவும் உறுதியாகவும் செயற்படுத்தப்படுகின்றது

## தர விடயம் 5 - பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும்

கோட்பாடு 5.1: பராமரிப்பாளர்கள், கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்கள் ஆகியோர்க்கான ஆள் சேர்த்தல், தேர்வு, நிலைமை பற்றிய சுருக்கமான அறிமுகம் ஆகிய செய்முறைகள் தரமான சேவையை வழங்குவதற்கு உற்சாகப்படுத்தி ஆதரவளிக்கின்றன

கோட்பாடு 5.2: தற்போது உளதான செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கும் தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான விடயங்களை அடையாளம் காண்பதற்கும் இந்தத் திட்டம் ஒரு முறையான செய்முறையைக் கொண்டுள்ளது.

கோட்பாடு 5.3: தொழில் சார்ந்த அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்கள் பராமரிப்பாளர்கள், கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்கள், முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்டுள்ள மற்றவர்கள் ஆகியோர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளன

கோட்பாடு 5.4: இந்தத் திட்டம் தொழில் சார்ந்த உடல்நலம், பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படச் செய்கின்றது

## தர விடயம் 6 - முகாமைத்துவமும் நிருவாகமும்

கோட்பாடு 6.1: முகாமைத்துவச் செயற்பாடுகள் தகைசான்றானவை, அத்துடன் பொருத்தமான சட்டவாக்கத்தின் கீழ் செயற்படுகின்றன

கோட்பாடு 6.2: இந்தத் திட்டம் எல்லா அக்கறையுள்ளவர்களுடனும் கலந்து ஆலோசித்து அவர்களுடன் கூட்டாக வேலை செய்கின்றது

கோட்பாடு 6.3: இந்தத் திட்டம் முகாமைத்துவப் பதிவுகளுக்காக திறமையுடையதும், பயன்விளையத்தக்கதும், தகைசான்றானதுமான செய்முறையைக் கொண்டுள்ளது

கோட்பாடு 6.4: இந்தத் திட்டம் குறைகளையும் முறைப்பாடுகளையும் கையாள்வதற்கு எளிமையானதும் தெளிவானதுமான நடைமுறைகளைக் கொண்டுள்ளது

கோட்பாடு 6.5: பராமரிப்பாளர்களும் கூட்டிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் சமூகத்தில் அவர்களது சேவைக்கான பயனுறுதியுடைய ஆதரவுப் பேச்சாளர்களாக உள்ளனர், அத்துடன் பிள்ளைகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நன்மையைப் பெற்றுக் கொடுப்பதற்காக மற்றைய முகவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குத் தீவிரமாக முயற்சி செய்கின்றனர்.

## அங்கீகாரத் தீர்மான மீளாய்வுக் குழு (ADRC) (The Accreditation Decisions Review Committee)

அங்கீகாரத் தீர்மான மீளாய்வுக் குழு (The Accreditation Decisions Review Committee (ADRC) NCAC இனால் செய்யப்பட்ட அங்கீகாரத் தீர்மானங்களை மீளாய்வு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளது. ADRC இன் உறுப்பினர்கள் பிள்ளைப் பராமரிப்புக்குப் பொறுப்பான கொமன்வெல்த் அரசாங்க அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர். ADRC சுயாதீனமாக இயங்குகின்றது. இது NCAC க்கு விதப்புரைகளைச் செய்கின்றது.

ADRC இன் அங்கீகாரத் தீர்மானத்தை மீளாய்வு செய்வதற்கு ஒரு திட்டம் அதற்கு விண்ணப்பிக்க முடியும். திட்டத்துக்கான அங்கீகாரத் தீர்மானத்தை மீளாய்வு செய்யும்போது, மீளாய்வுக்காக தனது வேண்டுகோளை விவரிக்கும் திட்டத்தினது எழுத்துமூலமான தகவலையும், NCAC அதன் ஆரம்ப அங்கீகாரத் தீர்மானத்தைச் செய்யும்போது கருத்தில் எடுக்கப்பட்ட எல்லாத் தகவலையும் ADRC கருத்தில் எடுக்கும். NCAC இறுதித் தீர்மானத்தை எழுத்து மூலமாக திட்டத்துக்கு அறிவிப்பதுடன் ADRC இன் விதப்புரைகளின் பிரதி ஒன்றையும் உள்ளடக்கும்.

ADRC பற்றியதும் அங்கீகாரத் தீர்மானத்தை மீளாய்வு செய்வதற்குரிய வேண்டுகோள் பற்றியதுமான கூடுதலான தகவலை NCAC உடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது NCAC இன் இணையத் தளத்தில் (www.ncac.gv.au) பெற்றுக்கொள்ளலாம்.

## பிள்ளைப் பராமரிப்பு உபகாரத்துக்கு (Child Care Benefit) நிதி அளித்தலும் FDCQA இல் திருப்திகரமான (Satisfactory) பங்களிப்பும் அதன் முன்னேற்றமும்

தொடர்ச்சியான பிள்ளைப் பராமரிப்பு உபகார (Child Care Benefit) அங்கீகாரத்துக்குத் தகுதியாக இருப்பதற்கு, குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சேவைகள் 1999 ஆம் ஆண்டின் ஒரு புதிய வரி முறை (குடும்ப உதவி) நிருவாகச் சட்டம் *(A New Tax System (Family Assistance) Administration Act 1999)* என்ற சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட பிள்ளைப் பராமரிப்பு உபகார (அங்கீகாரத்துக்கும் தொடர்ச்சியான அங்கீகாரத்துக்குமான பிள்ளைப் பராமரிப்புச் சேவைகளின் தகுதி) திருத்தத் தீர்மானம் 2001 (இலக்கம் 1) *(Child Care Benefit (Eligibility of Child Care Services for Approval and Continued Approval) Amendment Determination 2001 (No.1)* க்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புச் சேவைகளுக்குரிய தொடர்ச்சியான பிள்ளைப் பராமரிப்பு உபகார (Child Care Benefit) அங்கீகாரம் FDCQA இன் ஐந்து படிமுறைச் செயல்முறைத் தேவைப்பாடுகளுக்குச் சேவை அமைவாக இருத்தலையும் *Quality Practices Guide* (2004) இல் குறிப்பிடப்பட்டுள்ள தர விடயங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்க பராமரிப்புத் திட்ட அளவுக்குத் தொடர்ச்சியான மேம்பாடு உட்பட தரமான பிள்ளைப் பராமரிப்பில் திருப்திகரமான திட்ட அளவைப் பேணுவதில் அதன் செயல் விளக்கப் பொறுப்பையும் பொறுத்து உள்ளது.

பிள்ளைப் பராமரிப்பு உபகார (தொடர்ச்சியான அங்கீகாரத்துக்கான நிபந்தனைகளை மீறுதல்) திருத்தத் தீர்மானம் 2001 (இல.1) *Child Care Benefit (Breach of Conditions for Continued Approval) Amendment Determination 2001 (No.1))* க்கு இணங்க, ஒன்றில் விதிகளுக்கு அமைவாக நடக்காத அல்லது திருப்திகரமான முன்னேற்றத்தைச் செய்யாத சேவைகளை FDCQA மூலம் பிள்ளைப் பராமரிப்பு உபகாரத்தை நிருவகிப்பதற்குப் பொறுப்பான அவுஸ்திரேலிய அரசாங்கத் திணைக்களத்துக்கு NCAC அறிக்கையிடலாம்.

திணைக்களத்தின் செயலாளர் FDCQA க்கான கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறிய சேவையின் மீது தடைகளை விதிக்கலாம். இத் தடைகள் இடைநிறுத்துதலை அல்லது சேவையின் பிள்ளைப் பராமரிப்பு உபகார (Child Care Benefit) அங்கீகாரத்தைத் தள்ளுபடி செய்வதை உள்ளடக்கலாம். தமது பிள்ளைப் பராமரிப்பு உபகார (Child Care Benefit) அங்கீகாரம் இடைநிறுத்தப்பட்ட அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட சேவைகள் செயற்பாட்டு உதவிக்கான (Operational Assistance) தமது உரித்தையும் இழப்பர்.

## FDCQA உம் உரிமச் சட்டவாக்கமும்

அவுஸ்திரேலியாவில், குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களுக்கு உரிமம் வழங்கப்படுவதற்கான சட்டவாக்கத்துக்கு மாநில, ஆள்புல அரசாங்கங்கள் பொறுப்பாக உள்ளன. 1997 ஆம் ஆண்டு குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக்குரிய தேசிய திட்ட அளவுகள் உருவாக்கப்பட்டு கொமன்வெல்த், மாநில, ஆள்புல அரசாங்கங்களினால் உடன்பாடு காணப்பட்டன. அதன் பின்பு, 1999 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டன. குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக்கு உரிமம் வழங்குவதற்கு ஒரு தன்மைத்தான தேசிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கான ஓர் அடிப்படையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்த *குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக்குரிய தேசிய திட்ட அளவுகள்** ஏற்படுத்தப்பட்டன.

குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக்குரிய உரிமம் வழங்கும் ஒழுங்குவிதிகளைக் கொண்டுள்ள மாநிலங்களிலும் ஆள்புலங்களிலும் உரிமம் வழங்குதல் ஒரு சட்டரீதியான "தளத்தை" கொடுக்கின்றது. இதன் கீழ் எந்தவொரு திட்டமும் அல்லது பராமரிப்பாளரும் இயங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. மிகச் செயல் விரைவாக அளக்கப்படும், இடப்பரப்பு, சாதன அளவு, பிள்ளைகளின் எண்ணிக்கையும் வயதும், திட்டத்திலுள்ள பணியாளர்கள், ஆரம்பப் பிள்ளைப் பருவம் சம்பந்தமாக அவர்களது பயிற்சிக் காலம் போன்ற அத்தகைய காரணிகளை இது உள்ளடக்குகின்றது. அத்தகைய காரணிகள் தரத்துக்கு *உதவுகின்றன (contribute)*. தரத்தைத் *தீர்மானிக்கும் (determine)* காரணிகளை அடிப்படையாகக் கொண்டு FDCQA கட்டி எழுப்பப்படுகின்றது. FDCQA இன் முக்கிய கவனம் பராமரிப்பாளர்களினதும் பணியாளர்களினதும் செயற்பாடுகளிலும் பிள்ளைகள் பெறும் உண்மையான பலன் மீதும் ஆகும். ஆகக் குறைந்த திட்ட அளவுகளை நிறைவேற்றுவதிலிருந்து உயர்ந்த பராமரிப்பு மட்டங்களை அடைவதற்குத் தொடர்ச்சியாக முனைவதற்குத் தனது கவனத்தை இது திருப்புகின்றது.

FDCQA இல் பங்குபற்றும் திட்டமொன்று தொடர்பான உரிமம் வழங்குதல் அல்லது பிள்ளையின் பாதுகாப்பு பற்றிய விடயங்கள் சம்பந்தமாக NCAC க்கு அறிவிக்கப்படுமிடத்து பொருத்தமான அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்படும். உரிமம் வழங்குதல் அல்லது பிள்ளையின் பாதுகாப்பு பற்றிய விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளன என்று உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும்போது இந்த விடயங்கள் தீர்க்கப்பட்டுவிட்டன என்று NCAC கருதும். உரிமம் வழங்குதல் அல்லது பிள்ளைப் பராமரிப்பு விடயங்கள் தீர்க்கப்படாவிடில் FDCQA இலுள்ள திட்டத்தின் முன்னேற்றம் பாதிப்படையும்.

* குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்பு சம்பந்தமாக உரிமம் வழங்குவதற்கான ஒழுங்குவிதி மாநிலங்களிலும் ஆள்புலங்களிலும் இல்லாதவிடத்து, தமது பராமரிப்பில் உள்ள பிள்ளைகளுக்கான ஆதரவையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திச் செயற்படுவதற்காக சேவைகளுக்கு ஓர் அடிப்படைத் திட்ட அளவை *குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புக்குரிய தேசிய* திட்ட அளவுகள் கொடுக்கும். தயவு செய்து குடும்ப, சமூக சேவைகள் திணைக்கள (FaCS) *பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் கையேட்டைப்* பார்க்க. (இது FaCS www.facs.gov.au/childcare இணையத் தளத்தில் கிடைக்கும்)

## FDCQA உம் குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்கள் பற்றி NCAC இனால் பெறப்பட்டுள்ள முறைப்பாடுகளும்

NCAC தனது கடமையின் ஒரு பகுதியாக FDCQA இல் பங்குபற்றும் திட்டங்கள் பற்றிய முறைப்பாடுகளைக் கையாள்கின்றது. பெரும்பாலான முறைப்பாடுகள் அல்லது அக்கறையுள்ள விடயங்கள் திட்டத்துடன் நேரடியாகக் கலந்து ஆலோசித்து தீர்க்கப்படல் வேண்டுமென்பதை NCAC ஏற்றுக்கொள்கின்றது. ஏதாவது அக்கறையுள்ள விடயங்களை, குறைகளை அல்லது முறைப்பாடுகளைக் கையாள்வதற்குத் தெளிவான நடைமுறைகளை உருவாக்கி உறுதியாகச் செயற்படுத்துவதற்கு FDCQA இல் பங்குபற்றும் திட்டங்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றன. திட்டத்தின் பராமரிப்பாளர்களுடனும் பணியாளர்களுடனும் தமது அக்கறையுள்ள விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு முறைப்பாட்டாளர்களை NCAC உற்சாகப்படுத்துகின்றது

எழுத்துமூலமான முறைப்பாடுகளில் எழுப்பப்பட்டுள்ள விடயங்கள் பற்றி NCAC திட்டத்துக்கு அறிவிக்கும். மாநில/ஆள்புல உரிமம் வழங்குதல் பற்றிய ஒழுங்குவிதிகள் அல்லது பிள்ளையின் பாதுகாப்பு தொடர்பான ஒரு திட்டத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக தகவல் கிடைக்கப்பெறும்போது, NCAC இந்த அக்கறையுள்ள விடயங்கள் பற்றி மாநில/ஆள்புல உரிமம் வழங்கும் அதிகாரபீடத்துக்கு அல்லது வேறு பிற பொருத்தமான அதிகாரபீடத்துக்கு அறிவிக்கும்.

அக்கறையுள்ள விடயங்கள் தொடர்பாக திட்டத்தின் செயல் பிரதிபலிப்பு போதுமானது என NCAC திருப்திப்படும்போது அத்துடன் பொருத்தமானவிடத்து, உரிமம் வழங்குதல் அல்லது பிள்ளையின் பாதுகாப்பு பற்றிய விடயங்கள் தீர்க்கப்பட்டுவிட்டன என்று உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரபீடத்திடமிருந்து அறிவுரை பெறப்படும்போது குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்கள் பற்றிய முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுவிட்டன எனக் கருதப்படும்.

முறைப்பாட்டில் எழுப்பப்பட்டுள்ள அக்கறையுள்ள விடயங்கள் தீர்க்கப்படவில்லை என NCAC கருதினால் FDCQA இலுள்ள திட்டத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படலாம்.

## National Childcare Accreditation Council Inc (NCAC) பற்றி

அவுஸ்திரேலியா முழுவதும் உள்ள நீண்ட பகல்நேரப் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களுக்கான தர மேம்பாட்டு அங்கீகார முறைமையை (Quality Improvement and Accreditation System (QIAS) நிருவகிப்பதற்கு 1993 ஆம் ஆண்டு NCAC தாபிக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டிலும் 2003 ஆம் ஆண்டிலும் NCAC அவுஸ்திரேலியாவில் உள்ள குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களுக்குரிய குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் தர உறுதிப்பாட்டு (Family Day Care Quality Assurance) (FDCQA) முறையினதும் பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்திலான பராமரிப்புச் சேவைகளுக்குரிய பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்திலான பராமரிப்புத் தர உறுதிப்பாடினதும் (Outside School Hours Care Quality Assurance) (OSHCQA) நிருவாகத்துக்கும் பொறுப்பாக வந்தது. NCAC தாபிக்கப்பட்ட காலம் தொடக்கம் தரமான பிள்ளைப் பராமரிப்பை மேம்படச்செய்யவும் வரையறுக்கவும் முதன்மையான பங்கை வகித்துள்ளது, தொடர்ந்தும் வகித்து வருகின்றது. NCAC கொமன்வெல்த் அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெறுகின்றது. NCAC இன் தலைவரும் உறுப்பினர்களும் பிள்ளைப் பராமரிப்புக்குப் பொறுப்பாக உள்ள கொமன்வெல்த் அரசாங்க அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர்.

NCAC ஒரு தேசிய ஒழுங்கமைப்பாகும். அதன் உறுப்பினர்கள் மாநிலங்கள், ஆள்புலங்கள் ஆகியவற்றிலிருந்தும் பிள்ளைப் பராமரிப்பு உயர் தொழில் மற்றும் அது தொடர்பான விடயங்களில் ஈடுபட்டுள்ள துறைகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

NCAC அவுஸ்திரேலியாவில் உள்ள பிள்ளைகளுக்கான சேவைகளில் வழங்கப்படும் பிள்ளைப் பராமரிப்பின் தரத்தை ஆதரித்து மேம்படுத்துவதை தனது இலக்காகக் கொண்டுள்ளது. அத்துடன் அது எல்லா அவுஸ்திரேலியப் பிள்ளைகளும் உயர் தர (high quality) பராமரிப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்கு உதவுமுகமாக பிள்ளைப் பராமரிப்பு வழங்குநர்களுக்கும் குடும்பங்களுக்கும் தேவைப்படும் அறிவுரையை வழங்கி அவர்களுக்கு உதவி செய்கின்றது.

NCAC இன் தொழிற்பாடுகள் FDCQA இல் பங்குபற்றும் அவுஸ்திரேலிய குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்களுக்கும் OSHCQA இல் பங்குபற்றும் அவுஸ்திரேலிய பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்திலான பராமரிப்புச் சேவைகளுக்கும் QIAS இல் பங்குபற்றும் அவுஸ்திரேலிய நீண்ட பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கும் அங்கீகாரம் அளித்தல், FDCQA இலுள்ள குடும்பத்துக்கான பகல்நேரப் பராமரிப்புத் திட்டங்கள், OSHCQA இலுள்ள சேவைகள், QIAS இலுள்ள நிலையங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு பற்றியும் முன்னேற்றம் பற்றியும் கொமன்வெல்த் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

NCAC இன் வாடிக்கையாளர்கள் குறித்த அதன் நோக்கங்களும் பொறுப்பும் அதன் வாடிக்கையாளர் சேவைப் பட்டயத்தில் *(Customer Service Charter)* விவரிக்கப்பட்டுள்ளன. இதை NCAC உடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது NCAC இன் (www.ncac.gov.au) என்ற இணையத் தளத்தைப் பார்ப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

## கூடுதலான தகவல்

அங்கீகாரத்துக்குத் தேவைப்படும் FDCQA தரச் சுட்டிகளும் திட்ட அளவுகளும் பற்றிய தகவலுக்கு தயவு செய்து FDCQA *Quality Practices Guide* (2004) என்ற வழிகாட்டியைப் பார்க்க, அல்லது NCAC இன் இணையத் தளத்தைப் பார்க்க.

FDCQA *Handbook* (2004), FDCQA *Quality Practices Guide* (2004), FDCQA *Self-study Report* (2004), FDCQA *Validation Report* (2004) ஆகியவற்றை NCAC இடமிருந்து கொள்வனவு செய்ய முடியும்.